# QB365 Question Bank Software Study Material

## வாழ்வியல் கணிதம் முக்கியமான 1 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 8ம் வகுப்பு

## கணிதம்

மொத்த மதிப்பெண் : 50

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

25 x 1 = 25

1) 250 லிட்டரின் 12% என்பது 150 லிட்டரின் _______ இக்குச் சமமாகும்.

(அ) 10% (ஆ) 15% **(இ) 20%** (ஈ) 30%

2) ஒரு பள்ளித் தேர்தலில் A, B மற்றும் C ஆகிய மூன்று வேட்பாளர்கள் முறையே 153, 245 மற்றும் 102 வாக்குகளைப் பெற்றனர் எனில், வெற்றியாளர் பெற்ற வாக்குச் சதவீதம்_______ஆகும்.

(அ) 48% **(ஆ) 49%** (இ) 50% (ஈ) 50%

3) 10000 இன் 25% மதிப்பின் 15% என்பது _______ஆகும்.

**(அ) 375** (ஆ) 400 (இ) 425 (ஈ) 475

4) ஓர் எண்ணின் 60% இலிருந்து 60 ஐக் கழித்தால் 60 கிடைக்கும் எனில், அந்த எண்____ஆகும்

(அ) 60 (ஆ) 100 (இ) 150 **(ஈ) 200**

5) 48 இன் 48% = x இன் 64% எனில், x இன் மதிப்பு ______ ஆகும்.

(அ) 64 (ஆ) 56 (இ) 42 **(ஈ) 36**

6) ஒரு பழ வியாபாரி 200 இக்கு பழங்களை விற்று 40 ஐ இலாபமாகப் பெறுகிறார். அவரின் இலாபச் சதவீதம் _____ ஆகும்.

(அ) 20% (ஆ) 22% **(இ) 25%** (ஈ) $16\frac{2}{3}\%$

7) பூச்சட்டி ஒன்றை 528 இக்கு விற்று ஒரு பெண்20% இலாபம் பெறுகிறார். 25% இலாபம் பெற அவர் அதை என்ன விலைக்கு விற்க வேண்டும்?

(அ) ரூ. 500 **(ஆ) ரூ. 550** (இ) ரூ. 553 (ஈ) ரூ. 573

8) ஒரு நபர் ஒரு பொருளை 150 இக்கு வாங்கி, அதன் அடக்க விலையின் 12% ஐ இதரச் செலவுகளாக செலவிடுகிறார். 5% இலாபம் பெற அவர் அதை என்ன விலைக்கு விற்க வேண்டும்?

(அ) ரூ. 180 (ஆ) ரூ. 168 **(இ) ரூ. 176.40** (ஈ) ரூ. 88.20

9) 16% தள்ளுபடியில், 210 இக்கு வாங்கப்பட்ட ஒரு தொப்பியின் குறித்த விலை என்ன?

(அ) 243 (ஆ) 176 (இ) 230 **(ஈ) 250**

10) இரண்டு தொடர் தள்ளுபடிகளான 20% மற்றும் 25% ஆகியவற்றிக்கு நிகரான ஒரே தள்ளுபடி சதவீதம் _____ ஆகும்

**(அ) 40%** (ஆ) 45% (இ) 5% (ஈ) 22.5%

11) ஓர் அசலின் மீதான வட்டி, இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கணக்கிடப்பட்டால், ஓராண்டிற்கு ______ மாற்றுக் காலங்கள் இருக்கும்.

(அ) 2 (ஆ) 4 **(இ) 6** (ஈ) 12

12) 10% ஆண்டு வட்டியில், அரையாண்டுக்கொரு முறை வட்டிக் கணக்கிடப்பட்டால், 4400 ஆனது 4851 ஆக எடுத்து கொள்ளும் நேரம்_____ ஆகும்.

(அ) 6 மாதங்கள் **(ஆ) 1 ஆண்டு** (இ) $1\frac{1}{2}$ ஆண்டுகள் (ஈ) 2 ஆண்டுகள்

13) ஓர் இயந்திரத்தின் விலை 18000. அது ஆண்டுக்கு $16\frac{2}{3}\%$ வீதம் தேய்மானம் அடைகிறது. 2 ஆண்டுகளுக்குப் பிறகு, அதன் மதிப்பு _____ ஆக இருக்கும்.

(அ) ரூ. 12000 **(ஆ) ரூ. 12500** (இ) ரூ. 15000 (ஈ) ரூ. 16500

14) 10% ஆண்டு வட்டியில், ஆண்டுக்கொரு முறை வட்டிக் கணக்கிடப்பட்டால், 3 ஆண்டுகளில் _____ என்ற அசலானது 2662 தொகையாக ஆகும்.

**(அ) 2000** (ஆ) 1800 (இ) 1500 (ஈ) 2500

15) 2% ஆண்டு வட்டியில், 2 ஆண்டுகளுக்கு ஓர் அசலுக்குக் கிடைக்கும் கூட்டுவட்டிக்கும் தனிவட்டிக்கும் இடையேயுள்ள வித்தியாசம் 1 எனில், அசல் ஆனது _____ ஆகும்.

(அ) 2000 (ஆ) 1500 (இ) 3000 **(ஈ) 2500**

16) 2/5 இன் சதவீதம் _____.

(அ) 80% (ஆ) 60% **(இ) 40%** (ஈ) 20%

17) 800 இன் 75% ஆனது _____.

**(அ) 600** (ஆ) 660 (இ) 580 (ஈ) 540

18) 150 மி.லி ஆனது 1.5 லி - இல் எத்தனை சதவீதம்?

(அ) 1% (ஆ) 15% **(இ) 10%** (ஈ) 20%

19) ஒரு நகரின் மக்கள்தொகை 17640 ஆண்டுக்கு 5% மக்கள்தொகை அதிகரித்தால் இரண்டு வருடங்களுக்கு முன்னர் மக்கள் தொகை யாது?

(அ) 17000 (ஆ) 16280 **(இ) 16000** (ஈ) 15000

20) ஒரு குளிர்பதனியானது 5000 இக்கு வாங்கப்பட்டு 25% இலாபத்திற்கு விற்கப்பட்டால் விற்ற தொகை யாது?

**(அ) 6250** (ஆ) 5000 (இ) 4250 (ஈ) 6000

21) 24 ஆப்பிள்களின் வாங்கிய விலையானது 18 ஆப்பிள்களின் விற்ற விலைக்குச் சமம் எனில் இலாப சதவீதம் ______.

(அ) $16\frac{2}{3}\%$ **(ஆ) $33\frac{1}{3}\%$** (இ) 20% (ஈ) இவற்றில் எதுவுமில்லை

22) 10% மற்றும் 15% தொடர் தள்ளுபடிக்கு சமமான தள்ளுபடி _____.

(அ) 25% **(ஆ) 23.5%** (இ) 22.5% (ஈ) 20%

23) தனிவட்டி மற்றும் கூட்டுவட்டிக்கு 10% 3 ஆண்டுகளுக்கு வித்தியாசம் 15.50 எனில், அந்த ______.

(அ) 5000 (ஆ) 550 **(இ) 500** (ஈ) 1500

24) ஒரு தொகையானது தனிவட்டியில் 12 ஆண்டுகளில் இரட்டிப்பாதலில் வட்டி வீதம் ____.

**(அ) $16\frac{2}{3}\%$** (ஆ) 7.5 % (இ) $8\frac{1}{3}\%$ (ஈ) 10%

25) எத்தொகைக்கு 6 மாதங்களில் 4% தனிவட்டி வீதத்தில் வட்டி 150 கிடைக்கும்?

(அ) 5000 **(ஆ) 7500** (இ) 10000 (ஈ) 15000

## <u>கோடிட்ட இடங்களை நிரப்புக</u>

25 x 1 = 25

26) x இன் 30% என்பது 150 எனில், x இன் மதிப்பு _____ஆகும்

**500**

**x இன் 30% 150 என்பது**

**அதாவது** $\frac{3}{100} \times x = 150$

$x = \frac{150 \times 100}{30}$

**x = 500**

27) ஒரு மணி நேரத்தில் 2 நிமிடங்கள் என்பது ______% ஆகும்

$3\frac{1}{3}\%$

**2 நிமிடங்கள் = 1 மணி நேரத்தின் x % என்க.**

**1 மணிநேரம் = 60 நிமிடங்கள்**

$x\% = \frac{2}{60} \times 100 = \frac{200}{60} = \frac{10}{3} = 3\frac{1}{3}\%$

28) x இன் x % என்பது 25 எனில், x என்பது _____ ஆகும்.

**50**

**x இன் x % எனில்**

$\frac{x}{100} \times x = 25$

$\frac{x^2}{100} = 25$

$\therefore x^2 = 25 \times 100 = 2500$

$x = \sqrt{2500} = 50$

29) ஒரு பள்ளியில் உள்ள 1400 மாணவர்களில், 420 பேர் மாணவிகள். பள்ளியிலுள்ள மாணவர்களின் சதவீதம் _____ ஆகும்.

**70%**

**ஒரு பள்ளியில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை = 1400 பேர்**

**அப்பள்ளியில் உள்ள மொத்த மாணவிகளின் எண்ணிகள் = 420 பேர்**

**பள்ளியில் உள்ள மாணவர்கள் = 1400 - 420 = 980 பேர்**

**மாணவர்களின் சதவீதம் = மாணவர்களின் எண்ணிக்கை/மொத்த மாணவர்கள் x 100**

= $\frac{980}{1400} \times 100 = \frac{980}{14} = 70\%$

**மாணவர்களின் சதவீதம் = 70%**

30) 0.5252 என்பது _____% ஆகும்.

**52.52%**

**ஒரு எண்  கொடுத்து சதவீதம் கேட்டால் 100 ஆல் பெருக்க வேண்டும்**

**0.5252 என்பது 0.5252 x 100% = 52.52%**

31) ஓர் அலைபேசியானது 20% இலாபத்தில்  8400 இக்கு விற்கப்படுகிறது. அந்த அலைபேசியின் அடக்க விலை _____ ஆகும்

**ரூ. 7000**

**அலைபேசியின் அடக்க விலை x என்க.**

**அலைபேசியின் விற்ற விலை = 8400**

**இலாபம் = 20%**

**சூத்திரத்தின் படி**

**விற்ற விலை = (100 + இலாபம்%)/100 x அடக்க விலை**

$8400 = \frac{(100+20)}{100} \times x$

$8400 = \frac{120}{100}x$

$x = \frac{8400\times100}{120} = \quad 7000$

**அடக்க விலை  7000 ஆகும்.**

32) ஒரு பொருளானது $7\frac{1}{2}\%$ நட்டத்தில்  555 இக்கு விற்கப்படுகிறது. அந்த பொருளின் அடக்க விலை _______ ஆகும்.

**600**

**பொருளின் விற்றவிலை  555 மற்றும் நட்டவீதம் $7\frac{1}{2}\%$ ஆகும்.**

**சூத்திரத்தின் படி, விற்ற விலை = (100 + நட்டம்%)/100 x அடக்க விலை**

**555 =** $\frac{(100-7\frac{1}{2})}{100}$ **x அடக்க விலை**

**555 =** $\frac{(100-\frac{15}{2})}{100}$ **x அடக்க விலை =** $\frac{\frac{200-15}{2}}{100}$ **x அடக்க விலை**

**555 =** $\frac{\frac{185}{2}}{100}$ **x அடக்க விலை**

**அடக்க விலை =** $\frac{555\times100}{\frac{185}{2}} = \frac{555\times100}{185} \times 2 = 600$

**அடக்க விலை  600 ஆகும்**

33)  4500 ஐ குறித்த விலையாகக் கொண்ட ஒரு அரவை இயந்திரமானது தள்ளுபடிக்குப் பின்  4140 இக்கு விற்கப்பட்டது. தள்ளுபடிச் சதவீதம் ______ ஆகும்

8%

குறித்த விலை = 4500

தள்ளுபடி விலை = 4140

தள்ளுபடி = குறித்த விலை - தள்ளுபடி விலை

= 4500 - 4140 = 360

∴ தள்ளுபடி % = $\frac{\text{தள்ளுபடி}}{\text{குறித்த விலை}}$ x 100

= $\frac{360}{4500} \times 100 = 8\%$

34) 575 மதிப்புடைய ஒரு சட்டைக்கும், 325 மதிப்புடைய ஒரு T சட்டைக்கும் 5% சரக்கு மற்றும் சேவை வரி விதிக்கப்படுகிறது எனில், மொத்த இரசீது தொகை _____ ஆகும்.

சட்டையின் அடக்க விலை CP = 575

GST = 5%

இரசீது தொகை சூத்திரத்தின் படி = அடக்க விலை x $(\frac{100+GST\%}{100})$

$= 575 \times (\frac{100+5}{100}) = 575 \times \frac{105}{100} = 603.75$

டி.சட்டையின் அடக்க விலை = 325

GST = 5%

இரசீது தொகை சூத்திரத்தின் படி = அடக்க விலை x $(\frac{100+GST\%}{100})$

$= 325 \times (\frac{100+5}{100}) = 325 \times \frac{105}{100} = 341.25$

மொத்த இரசீது தொகை = 603.75 + 341.25 = 945

35) 5000 இக்கு 12% ஆண்டு வட்டியில், 2 ஆண்டுகளுக்கு, ஆண்டுக்கொரு முறை வட்டிக் கணக்கிடப்பட்டால் கிடைக்கும் கூட்டுவட்டியானது _____ ஆகும்

கூட்டு வட்டி விதியின் படி,கூட்டு வட்டி = தொகை - அசல்

தொகை A = $P(1+\frac{r}{100})^n = 5000(1+\frac{12}{100})^2 = 5000 \times (\frac{112}{100})^2 = 6272$

கூட்டு வட்டி= 6272 - 5000 = 1272

36) 8000 இக்கு 10% ஆண்டு வட்டியில், ஓர் ஆண்டுக்கு, அரையாண்டுக்கு ஒரு முறை வட்டிக் கணக்கிடப்பட்டால் கிடைக்கும் கூட்டுவட்டியானது ______ஆகும்.

கூட்டு வட்டி (CI) = தொகை - அசல்

தொகை A = $P(1+\frac{r}{100})^n$ [ 2n ஆனது அரையாண்டு வட்டி]

r = 10% ஓர் ஆண்டுக்கு எனில்

அரையாண்டுக்கானது, r = 10/2 = 5%

A = $8000(1+\frac{5}{100})^{2\times1} = 8000 \times (\frac{105}{100})^2 = 8820$

கூட்டு வட்டி = 8820 - 8000 = 820

37) ஒரு நகரத்தின் மக்கள்தொகை ஆண்டுதோறும் 10% வீதம் அதிகரிக்கிறது. அதன் தற்போதைய மக்கள்தொகை 26620 எனில், 3 ஆண்டுகளுக்கு முன் மக்கள்தொகை ______ ஆகும்

மக்கள் தொகை அதிகரிக்கும் வீதம் = r = 10%

தற்போதைய மக்கள் தொகை = 26620

3 ஆண்டுகளுக்கு முன் மக்கள் தொகை x என்க.

அதிகரிக்கும் மக்கள் தொகை வீதத்தை கூட்டு வட்டி முறையில் கணக்கிட,

26620 = $x(1+\frac{r}{100})^3$

26620 = $x(1+\frac{10}{100})^3 = x(\frac{110}{100})^3$

x = 26620 x $(110/100)^3$ = 20000

3 ஆண்டுகளுக்கு முன் உள்ள மக்கள் தொகை 20,000 ஆகும்.

38) கூட்டுவட்டியானது காலாண்டுக்கொரு முறை கணக்கிடப்பட்டால், தொகையை_____ என்ற சூத்திரத்தைப் பயன்படுத்திக் காணலாம்

$P(1+\frac{r}{100})^{4n}$

காலாண்டு என்பது வருடத்திற்கு 4 முறை கணக்கிடப்படுவது. எனவே, தொகையை கூட்டு வட்டி சூத்திரத்தைப் பயன்படுத்தி $P(1+\frac{r}{100})^{4n}$ என காணலாம்.

39) 5000 இக்கு, 8% ஆண்டு வட்டியில், 2 ஆண்டுகளுக்கு கூட்டுவட்டிக்கும் தனிவட்டிக்கும் இடையேயுள்ள வித்தியாசம்______ ஆகும்.

**தனி வட்டி மற்றும் கூட்டு வட்டிக்கிடையேயுள்ள வித்தியாசம்**

**கூட்டு வட்டி - தனி வட்டி** = $P(\frac{r}{100})^2$

**அசல் (P) = 5000, r = 8% ஆண்டுக்கு ஒரு முறை**

**கூட்டு வட்டி - தனி வட்டி** = $5000(\frac{8}{100})^2 = 5000 \times \frac{8}{100} \times \frac{8}{100} = 32$

**32**

40) 24 ஆண்கள் 12 நாள்களில் 48 பொருள்களை செய்வர் எனில், 6 ஆண்கள் _____ பொருள்களை 6 நாள்களில் செய்வர்.

**(i) ஆண்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது நாட்களின் எண்ணிக்கை குறையும். எனவே ஆண்களும் நாட்களும் எதிர்விகித மாறலாகும்.**

**(ii) நாட்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது அதிக எண்ணிக்கையில் பொருட்கள் செய்ய இயலும். எனவே நாட்களும், பொருட்களும் நேர்விகித மாறலாகும்.**

| ஆண்கள் | நாள்கள் | பொருள்கள் |
|---|---|---|
| 24 | 12 | 48 |
| 6 | 6 | x |

**(iii) ஆட்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது பொருட்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். எனவே ஆட்களும் பொருட்களும் நேர்விகித மாறலாகும்.**

**இங்கு $P_1 = 24$ $D_1 = 12$ $W_1 = 48$**

**$P_2 = 6$ $D_2 = 6$ $W_2 = x$**

$\frac{P_1 \times D_1}{W_1} = \frac{P_2 \times D_2}{W_2}$

$\frac{24\times12}{48} = \frac{6\times6}{x} \Rightarrow x = \frac{6\times6\times48}{24\times12} \Rightarrow x = 6$

**தேவையான பொருட்களின் எண்ணிக்கை = 6**

41) 15 வேலையாள்கள் 4 கி.மீ நீளமுள்ள சாலையை 4 மணி நேரத்தில் அமைப்பர் எனில், _____ வேலையாள்கள் 8 கி.மீ நீளமுள்ள சாலையை 8 மணிநேரத்தில் அமைப்பர்.

**தேவையான வேலையாள்களின் எண்ணிக்கை x என்க.**

| சாலையின் நீளம் | வேலை நேரம் | வேலையாள்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 4 கி.மீ | 4 மணி | 15 |
| 8 கி.மீ | 8 மணி | x |

**(i) வேலையாள்கள் அதிகரிக்கும் போது அதிக நீளமுள்ள சாலை அமைக்க இயலும், எனவே வேலையாள்களும் சாலையின் நீளமும் நேர்விகிதத்தில் இருக்கும்.**

**எனவே 4 : 8 :: 15 : x ...(1)**

**(ii) வேலையாள்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது குறிப்பிட்ட வேலையைச் செய்து முடிக்க குறைவான நேரமே போதுமானது. எனவே நேரமும் வேலையாள்களின் எண்ணிக்கையும் எதிர் விகித மாறலாகும்.**

**8 : 4 :: 15 : x ....(2)**

**(1) மற்றும் (2) லிருந்து**

$$\left.\begin{array}{l}4:8\\8:4\end{array}\right\} :: 15 : x$$

**முனைக் கோடி மதிப்புகளின் பெருக்கல் பலன் = சராசரி மதிப்புகளின் பெருக்கல் பலன்**

**4 x 8 x x = 8 x 4 x 15**

$x = \frac{8\times4\times15}{4\times8}$

**x = 15 வேலையாள்கள்**

42) நாளொன்றுக்கு 12 மணி நேரம் வேலை செய்து ஒரு வேலையை 25 பெண்கள் 36 நாட்களில் முடிப்பர் எனில், 20 பெண்கள் நாளொன்றுக்கு _____ மணி நேரம் வேலை செய்து அதே வேலையை 30 நாள்களில் முடிப்பர்.

**தேவையான வேலை நேரம் x என்க.**

| பெண்கள் | நாட்கள் | நேரம் (மணி) |
|---|---|---|
| 25 | 36 | 12 |
| 20 | 30 | x |

**இங்கு பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது வேலை நேரம் குறையும். எனவே பெண்களின் எண்ணிக்கையும், வேலை நேரமும் எதிர் விகித மாறலாகும்.**
**பெருக்கல் காரணி = 25/20**
**வேலை நாட்கள் அதிகரிக்கும் போது வேலை நேரம் குறையும்.**
**எனவே நேரமும் நாட்களும் எதிர்விகித மாறலாகும்.**
**பெருக்கல் காரணி = 36/30**

$x = 12 \times \frac{25}{20} \times \frac{36}{30}$

**x = 18**
**நாளொன்றுக்கு 18 மணி நேரம் வேலை செய்ய வேண்டும்.**

43) விக்ரம் ஒரு வேலையின் மூன்றில் ஒரு பகுதியை p நாள்களில் முடிப்பார் எனில், அவர் அந்த வேலையின் 3/4 பகுதியை ______ நாள்களில் முடிப்பார்.

**1/3 பகுதி வேலையை முடிக்க எடுத்துக்கொள்ளும் நாட்கள் = p**
**முழு வேலையை முடிக்க (3/3) எடுத்துக்கொள்ளும் நாட்கள் =3p**
**3/4 பகுதி வேலையை முடிக்க எடுத்துக்கொள்ளும் நாட்கள் = 3p x 3/4 = 9/4p = $2\frac{1}{4}$ p நாட்கள்**

44) m நபர்கள் ஒரு வேலையை n நாள்களில் முடிப்பர் எனில், 4m நபர்கள் அந்த வேலையை ____ நாள்களிலும்,m/4 நபர்கள் அதே வேலையை ______ நாள்களிலும் முடிப்பர்.

**m நபர்கள் ஒரு வேலையை முடிக்கும் நாட்கள் = n**
**(i) ∴ வேலையை நபர்கள் - நாட்களில் கணக்கிட்டால் கிடைப்பது, = m x n = mn  நபர்கள் = நாட்கள் ஆகும்.**
**4m நபர்கள் வேலையை முடிக்கும் நாட்கள் = mn/4m நாட்கள் = n/4 நாட்கள்.**
**(ii) m/4 நபர்கள் வேலையை முடிக்கும் நாட்கள் = (mm)/(m/4) நாட்கள் = 4mm/m = 4n நாட்கள்**

45) A என்பவர் ஒரு வேலையை 3 நாள்களிலும் B என்பவர் 6 நாள்களிலும் முடிப்பர் எனில், இருவரும் ஒன்றாகச் சேர்ந்து அந்த வேலையை _______ நாள்களில் முடிப்பர் .

**2**

46) A என்பவர் ஒரு வேலையை 24 நாள்களில் முடிப்பார். A மற்றும் B ஆகியோர் ஒன்றாக இணைந்து ஒரு வேலையை 6 நாள்களில் முடிப்பர் எனில், B என்பவர் தனியே அந்த வேலையை _____ நாள்களில் முடிப்பார்.

**8**

47) A என்பவர் தனியே ஒரு வேலையை 35 நாள்களில் முடிப்பார். B ஆனவர், A ஐ விட 40% கூடுதல் திறன் வாய்ந்தவர் எனில், B ஆனவர் அந்த வேலையை _______ நாள்களில் முடிப்பார்.

**25**

48) A என்பவர் தனியே ஒரு வேலையை 10 நாள்களிலும் B ஆனவர் தனியே 15 நாள்களிலும் முடிப்பர். அவர்கள் இந்த வேலையை  200000 தொகைக்கு ஒப்புக் கொண்டனர் எனில், A பெறும் தொகை _______ ஆகும்.

**1,20,000**

49) ஒரு பொருளின் விற்பனை விலையானது அதன் அடக்க விலையை விடக் குறைவு எனில், ________ ஏற்படுகிறது.

**நட்டம்**

50) ஒரு பொருளின் அடக்க விலை மற்றும் விற்ற விலையின் விகிதம் 5:7 எனில், இலாபம் ____% ஆகும்

**40%**
**அடக்க விலை = 5x**
**வி.வி. = 7x**
**இலாபம் = 7x  - 5x = 2x**
**இலாப சதவீதம் = 2x/5x x 100 = 40%**